பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட தாய்நாட்டிற்கு ஜனாதிபதி திரும்பினார்.

17.05.2009 - ஞாயிற்றுக்கிழமை

ஜோர்தானில் இடம்பெறும் ஜீ - 11 நாடுகளின் மாநாட்டில் பங்குகொள்ளச் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று காலை நாடு திரும்பினார்.

ஜனாதிபதி வந்த விமானம் விமானநிலையத்தில் தரையிறங்கியதும் ஜனாதிபதி விமானத்திலிருந்து இறங்கி நிலத்தில் தலை வைத்து தாய்நாட்டை வணங்கினார். இதனையடுத்து ஜானாதிபதிக்கு ஆசி வேண்டி பௌத்த இந்து கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மத அனுஷ்டானங்கள் இடம்பெற்றன. இலங்கை பயங்கரவாதத்திலிருந்து விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் கொழும்பின் பல பகுதிகளிலும் தேசியக்கொடிகள் பறக்க விடப்பட்டு பட்டாசு கொளுத்தி கொண்டாட்டங்கள் இடம்பெறுகின்றன.

முன்னதாக ஜீ - 11 உச்சிமாநாட்டில் ஜனாதிபதி உரையாற்றிய போது கொடூரமான புலிப் பயங்கரவாதிகளிடமிருந்து விடுதலைபெற்ற இலங்கைத் தாய்திருநாட்டுக்கு தான் திரும்பிச் செல்வதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜி11 உச்சிமாநாட்டில் உரையாற்றுகையில் கூறியிருந்தார். ஜோர்தானில் நடைபெற்ற மேற்படி மாநாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றியபோது எனது அரசாங்கம் எமது ஆயுதப் படைகளின் முழுமையான பங்களிப்புடன் முன்னெப்போதும் இல்லாதவாறான மனிதாபிமான நடவடிக்கையொன்றை மேற்கொண்டிருந்தது எனவும் தெரிவித்திருந்தார். அப்பேச்சின் இறுதியில் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாக தோற்கடித்துள்ளது என்பதை அறிவிப்பதில் நான் பெருமைடைகிறேன் என ஜனாதிபதி தெரிவித்திருந்ததுடன் பயங்கரவாதத்தை முற்றாக தோற்கடித்த ஒரு நாட்டின் தலைவராக தான் தாயகம் திரும்பப்போவதாகவும் ஜனாதிபதி கூறியிருந்தார்.




















ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)
EELAM PEOPLE'S DEMOCRATIC PARTY
ඊළම් ජනතා ප්‍රජාතන්ත්‍රවාදී පක්ෂය (ඊ.පී.ඩී.පී.)

**Related Sites:** **Anandasangaree**, **Asiantribune**, **Athirady**, **Colombopage**, **Eeelanaasam**, **Engaltheaasam**, **Ilakku**, **PresidentSL**, **Thayagam**, **Theerppu**, **Thenee**, **Tirradio**, **Telonews**

121, Park Road, Colombo - 05, Sri Lanka.
Tel: 94 11 2551015, 2593515 Fax: 94 11 2585255 , 2596741

E-Mail: epdp@sltnet.lk
© 2008 www. epdpnews.com, All Rights Reserved.